கடந்த 2006, 2016, 2021 ஆகிய ஆண்டுகளில் ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில் 3 முறை போட்டியிட்டு 3 முறையும் வெற்றி பெற்று 15 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினராக மக்கள் பணியாற்றி உள்ளேன்.

ஆலந்தூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை வைத்த னர். கடந்த தி.மு.க. ஆட்சி யில் அப்போது முதல்–அமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலினிடம் இது பற்றி கோரிக்கை வைத்தேன்.

எனது கோரிக்கையை ஏற்று அப்போது மு.க.ஸ்டா லின் 2024–ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஆலந்தூர் உட்பட 11 இடங்களில் கலைக் கல்லூரி அமைக்கப்படும் என்று அறிவித்தார். அத்துடன் ஆலந்தூர் அரசு கல்லூரி அமைத்திட ரூ.22.10 கோடி நிதியையும் ஒதுக்கினார்.

இக்கல்லூரி அமைத்திட ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் அருகில் 1.88 ஏக்கர் பரப்பிலான நிலத்தை அரசு கையகப்படுத்தி தந்தது. 2025–ம் ஆண்டு மே மாதம் 27–ந்தேதி ஆலந்தூர் அரசு கலைக் கல்லூரிக்கு முதல்–அமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் காணொளி மூலம் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

நங்கநல்லூர் நேரு மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் அக்கல்லூரி தற்காலி கமாக தொடங்கப்பட்டது. த.வெ.க. ஆட்சி அமைந்த பின்னர் ஆலந்தூர் த.வெ.க. எம்.எல்.ஏ. முன்னிலையில் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு பூமி பூஜை போடப் பட்டது.

இந்த நிலையில் ஏற்க னவே முன்னாள் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலி னால் தொடங்கி வைக்கப் பட்டு அடிக்கல் நாட்டப்பட்ட ஆலந்தூர் அரசு கலைக் கல்லூரிக்கு மீண்டும் முதல்–அமைச்சர் விஜய் நேற்று அடிக்கல் நாட்டி உள்ளார்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறினார்.



விழாவில் ஜப்பானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு போட்டியில் 2 பதக்கங்களை வென்ற வேல்ஸ் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் விஷால் டி.கே.வுக்கு ரூ.5 லட்சம் ரொக்கப்பரிசை வேல்ஸ் பல்கலைக்கழக வேந்தர் டாக்டர். ஐசரி கே.கணேஷ் வழங்கினார். அருகில் வேல்ஸ் குழுமங்களின் துணை தலைவர் டாக்டர்.பிரீத்தா கணேஷ் உள்ளார்.

அடுத்த கல்வியாண்டு முதல்

வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் விளையாட்டு துறைக்கு தனிப் பட்டப்படிப்பு

வேந்தர் டாக்டர்.ஐசரி கே.கணேஷ் தகவல்

சென்னை, நவ.19–

வேல்ஸ் பல்கலை க்கழகத்தின் சார்பில் விளை யாட்டு துறையில் சாதனை படைத்த மாணவர்களைக் கவுரவிக்கும் வகையில் "வேல்ஸ் சாம்பியன்ஸ்"–2026' விருது வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விளை யாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற வேல்ஸ் பல்கலைக்கழக மாணவர்கள் சுமார் 50 பேர் கவுர விக்கப்பட்டனர். மேலும், 15 வகையான விளையாட்டு போட்டிகளில் சாதனை படைத்த மாணவர்களுக்கு மொத்தம் ரூ.15 லட்சம் பரிசுத்தொகை வழங்கப் பட்டது. விழாவில் சிறப்பு விருந்தி னராக ஜப்பானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் இரண்டு பதக்கங்களை வென்ற வேல்ஸ் பல்கலை க்கழகத்தின் முன்னாள் மாணவர் விஷால் டி.கே. கலந்து கொண்டார்.

விழாவில் தலைமையு ரையாற்றிய வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் நிறுவன வேந்தர் டாக்டர். ஐசரி கே. கணேஷ் பேசுகையில், "விஷால் டி.கே.வின் சாத னைகள் வேல்ஸ் பல்க லைக்கழகத்திற்குப் பெருமை சேர்க்கின்றன. வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் கல்விக்கு அளிக்கப்படும் அதே முக்கியத்துவம் விளை யாட்டுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சி யாக, திண்டிவனத்தில் 260 ஏக்கர் பரப்பளவில் அமை யவுள்ள புதிய பல்கலைக்கழக வளாகத்தில், மாண வர்களின் விளை யாட்டுத் திறனை மேம்படுத்துவதற்குத் தேவையான அனைத்து வசதி களும், உபக ரணங்களும் இடம்பெறும். மேலும், வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் வரும் கல்வியாண்டு முதல் விளையாட்டு துறைக்கென தனிப் பட்டப்படிப்பு தொடங்கப்பட உள்ளது. அதற்கான அனுமதியும் பெறப்பட்டுள்ளது" என்றார்.

நிகழ்ச்சியில் வேல்ஸ் குழுமங்களின் துணை தலைவர் டாக்டர்.பிரீத்தா கணேஷ், வேல்ஸ் பல்கலை க்கழகத்தின் இணைவேந்தர் டாக்டர். பாஸ்கரன், பதிவாளர் டாக்டர். சந்திரசேகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



வ.உ.சிதம்பரனார் நினைவு நாளை முன்னிட்டு சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் உள்ள அவரது சிலைக்கு, அனைத்து முதலியார் வேளாளர் சங்கங்கள் பேரவை சார்பில் அதன் தலைவர் வா.பா.பழனி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் நிர்வாகிகள் ஜி.பி.பாபு, தேவகி அம்மாள், கஜேந்திர பாபு, பூங்கொடி, சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பள்ளிகளில் தூய்மைப் பணிகளில் மாணவர்களை ஈடுபடுத்தக் கூடாது

தமிழக அரசு எச்சரிக்கை

சென்னை, நவ. 19–

பள்ளிகளில் தூய்மைப் பணிகளில் மாணவர்களை ஈடுபடுத்தக் கூடாது. மீறினால் ஆசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை பள்ளிக்கல்வித்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கும் அரசு அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் கூறியிரு ப்பதாவது:–

தூய்மைபணி

பள்ளி வளாகம், வகுப்ப றைகள் மற்றும் கழிவ றைகளை தூய்மைப்படுத்தும் பணிகளில் மாணவர்களை ஈடுபடுத்தக் கூடாது. இதனை மீறி மாணவர்களை தூய்மைப் பணிகளில் ஈடுப டுத்தும் தலைமை ஆசிரி யர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண வர்களை பள்ளி வளாகம் மற்றும் கழிவறை களை சுத்தம் செய்யும் பணிகளில் ஈடுபடுத்துவது தொடர்பாக மாநில மனித உரிமைகள் ஆணையத்தில் தொடரப்பட்ட வழக்கில், 2021–ம் ஆண்டு டிசம்பர் 20–ந் தேதி வழங்கப்பட்ட உத்தரவு மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகளை மேற்கோள் காட்டி பள்ளிக் கல்வித்துறை இந்த அறிவுறுத்தலை வெளி யிட்டுள்ளது.

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிக ளில் பயிலும் மாணவர்களை பள்ளி வளாகம், வகுப்ப றைகள் மற்றும் கழிவறை களை சுத்தம் செய்யும் பணிகளில் ஈடுபடுத்துவது கூடாது என்று இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கட்டா யம் பின்பற்ற வேண்டும் என்றும், மாணவர்களின் நலன் மற்றும் கண்ணியத்தை பாதுகாக்கும் வகையில் இந்த அறிவுறுத்தல் வழங்கப் பட்டுள்ளது.

கண்காணிக்க வேண்டும்

மேலும், இந்த உத்தரவு நடைமுறைப்படுத்தப்படு வதை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவ லர்கள் கண்காணிக்க வேண் டும் என்றும், விதிமீறல்கள் குறித்து புகார்கள் வந்தால் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பள்ளிக் கல்வித்துறை அறிவுறுத்தி உள்ளது.

வள்ளியூர் சூட்டுபொத்தையில்

ஸ்ரீமுத்துகிருஷ்ண சுவாமிகளின் கிரிவல தேரோட்டம்



ஸ்ரீமுத்துகிருஷ்ண சுவாமிகளின் கிரிவல தேரோட்டம் நடைபெற்ற போது எடுத்த படம்.

வள்ளியூர், நவ.19–

நெல்லை மாவட்டம் வள்ளியூர் சூட்டு பொத்தை மலை அடி வாரத்தில் ஸ்ரீ முத்து கிருஷ்ண சுவாமி கோவில் உள்ளது. ஸ்ரீ முத்துகிருஷ்ண சுவாமியின் 113–வது கிரிவல தேரோட்ட திருவிழா இன்று காலை 5 மணிக்கு தொடங்கியது.

முன்னதாக சூட்டு பொத்தை அடிவாரத்தில் உள்ள வன விநாயகருக்கு சிறப்பு பூஜை யுடன் விழா தொடங்கியது. அதனைத் தொடர்ந்து மேருமண்ட பத்தில் உள்ள ஸ்ரீமுத்து கிருஷ்ண சுவாமிக்கு சிறப்பு அலங்காரம் மற்றும் பூஜை நடைபெற்றது.

தேரோட்டம்

ஸ்ரீமுத்துகிருஷ்ண சுவாமி குருபூஜையை யொட்டி முக்கிய நிகழ்வாக இன்று காலை 5 மணிக்கு கிரிவல தேரோட்டம் நடைபெற்றது. தேரோட்டத்தை பூஜ்ஜிய ஸ்ரீ மாதாஜி வித்தம்மா தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து மேள வாத்தியங்கள் முழங்க லலிதகலா மந்திர் கலை ஞர்களின் பரதநாட்டியம், கோலாட்டங்களுடன் தேரோட்டம் நடைபெற்றது.

சூட்டுப்பொத்தையை சுற்றி திரளான பக்தர்கள் வடம்பிடித்து தேர் இழுத்து வந்தனர். தேரோட்டத்தில் சிங்கப்பூர், மலேசியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்தும் டெல்லி, பெங்க ளூர், கோவை,சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் இருந்தும் ஸ்ரீ முத்துகிருஷ்ண சுவாமி பக்தர்கள் பங்கேற்ற னர். தேர் நிலைக்கு வந்து சேர்ந்ததும் சிறப்பு அன்ன தானம் வழங்கப்பட்டது.

மாலையில் வசந்த மண்டபத்தில் திருவிளக்கு பூஜை நடைபெறுகிறது. இதில் திரளான பெண்கள் கலந்து கொண்டு வழிபடுகிறார்கள். நாளை காலை 8.30 மணிக்கு வசந்தமண்டபத்தில் ஸ்ரீ முத்துகிருஷ்ண சுவாமி குருபூஜை நடைபெறுகிறது. 24–ந் தேதி காலை 8.30 மணிக்கு வசந்த மண்ட பத்தில் குருஜெயந்தியும் மாலை 5 மணிக்கு சூட்டுபொத்தை உச்சியில் கார்த்திகை தீபம் ஏற்றும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

விழா ஏற்பாடுகளை ஸ்ரீ முத்துகிருஷ்ண சுவாமி மிஷன் நிர்வாகி பூஜித குரு மாதாஜி வித்தம்மா தலைமையில் நிர்வாகிகள், உறுப்பினர்கள், அலுவ லர்கள் செய்துள்ளனர்.

பாடல் எழுத வாய்ப்பு

திரைப்படத்தில் பாடல் எழுதவும் பாடவும் வேண்டுமா?

கவிஞர். இரா. கணபதி

99446 30246

தமிழ்நாடு அரசு,
விக்கிரவாண்டி பேரூராட்சி - விழுப்புரம் மாவட்டம்
2026-2027ம் ஆண்டிற்கு பள்ளி மேம்பாட்டு மானிய திட்டம்
ஆறாவது நிதிக்குழு மானியம் திட்டதின் கீழ்

ந.க.எண். அ1 / 352 / 2026 — ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு — நாள் : 18.11.2026

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி பேரூராட்சியில் 2026-2027-ம் ஆண்டின் பள்ளி மேம்பாட்டு மானிய திட்டம் ஆறாவது நிதிக்குழு மானியம் திட்டதின் கீழ், கீழ்கண்ட விவரப்படி பணிகள்செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளத்தின் வாயிலாக 10.12.2026-ம் தேதி வியாழக் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 10-12-2026 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் விக்கிரவாண்டி பேரூராட்சி அலுவலகத்தில் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவர்களால் திறக்கப்படும்.

மேலும் கீழ்கண்ட இணைய தளங்களில் 10.12.2026 பிற்பகல் 3.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளி படிவம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணையதளத்தின் வாயிலாக வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பரிசீலிக்கப்படும். இதர வழியில் வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளமாட்டாது.

http://tntenders.gov.in இதர விபரங்களை இப்பேரூராட்சி அலுவலக வேலை நாட்களில் மற்றும் வேலை நேரங்களில் நேரில் வந்து தெரிந்து கொள்ளலாம்.

பள்ளி மேம்பாட்டு மானிய திட்டம் - ஆறாவது நிதிக்குழு மானியம் திட்டத்தின் கீழ் 2026-2027

வ. எண்.	திட்டப்பணியின் பெயர்	மதிப்பீடு தொகை (லட்சத்தில்)	வைப்புத் தொகை ரூ.	பணியினை முடிக்க வேண்டிய காலம்
1	2	3	4	5
1	விக்கிரவாண்டி பேரூராட்சிக்கு உட்பட்ட அரசு மகளிர் உயர்நிலை பள்ளியில் புதியதாக 8 வகுப்பறைகள் கட்டும் பணி	160.00	1,60,000/-	180 நாட்கள்

தலைவர், பேரூராட்சி மன்றம், விக்கிரவாண்டி விழுப்புரம் மாவட்டம்.

செ.ம.தொ.இ./3654/ ஒப்பந்தப்புள்ளி / 2026

செயல் அலுவலர், விக்கிரவாண்டி பேரூராட்சி., விழுப்புரம் மாவட்டம்.

alldigi tech
A digitide company

அல்டிஜி டெக் லிமிடெட்

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: தரைத்தளம் (பிளாக் 9A - 9B) மற்றும் முதல் தளம் (பிளாக் 9B), 1/124 சிவாஜி கார்டன்ஸ், DLF சைபர் சிட்டி, மூன்லைட் ஸ்டாப், மணப்பாக்கம், சென்னை – 600089
தொலைபேசி: 044 4299 7070; CIN: L72300TN1998PLC041033
இணையதளம்: www.alldigitech.com மின்னஞ்சல்: investorcontact@alldigitech.com

29 அக்டோபர் 2026 தேதியிட்ட தபால் வாக்குச் சீட்டு அறிவிப்புக்கான திருத்த அறிவிப்பு

Alldigi Tech Limited ("நிறுவனம்") சார்பில், அக்டோபர் 29, 2026 தேதியிட்ட அஞ்சல் வாக்குச் சீட்டு அறிவிப்பு (Postal Ballot Notice) மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட விளக்க அறிக்கை ஆகியவற்றின் தொடர்ச்சியாகவும், அவற்றுடன் இணைத்தும் படிக்கப்பட வேண்டிய இந்தத் திருத்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. நிறுவனத்தின் பங்குதாரர்களின் ஒப்புதலைப் பெறுவதற்காக, டெண்டர் ஆஃபர் (Tender Offer) முறையின் மூலம் நிறுவனத்தின் பங்குகளைத் திரும்பப் பெறுவதற்கான (Buyback) முன்மொழிவு தொடர்பான மேற்கண்ட அறிவிப்பு, நவம்பர் 03, 2026 அன்று நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் அனுப்பப்பட்டது. இது தொடர்பான அசல் செய்தித்தாள் விளம்பரம் நவம்பர் 04, 2026 அன்று வெளியிடப்பட்டது.

அஞ்சல் வாக்குச் சீட்டு அறிவிப்பில் இடம்பெற்றுள்ள சில புள்ளிவிவரங்களை மீண்டும் சரிபார்த்தபோது, மார்ச் 31, 2026 அன்று முடிவடைந்த நிதியாண்டிற்கான நிறுவனத்தின் சமீபத்திய தணிக்கை செய்யப்பட்ட தனிநிலை மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில், நிறுவனத்தின் மொத்த செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் கையிருப்பு நிதிகளின் (Free Reserves) மொத்தத் தொகையில், பங்குகளைத் திரும்பப் பெறும் அளவின் (Buyback Size) சதவீதக் கணக்கீட்டில் கவனக்குறைவாக ஏற்பட்ட சில பிழைகள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

விவரங்கள்	அஞ்சல் வாக்குச் சீட்டு அறிவிப்பில் இடம்பெற்றுள்ளபடி	திருத்தப்பட்ட வாசகம்
சிறப்புத் தீர்மானம் – பத்தி 1 (பக்கம் 2)	…இது, மார்ச் 31, 2026 அன்று முடிவடைந்த நிதியாண்டிற்கான நிறுவனத்தின் சமீபத்திய தணிக்கை செய்யப்பட்ட தனிநிலை மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில், நிறுவனத்தின் மொத்த செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் கையிருப்பு நிதிகளின் மொத்தத் தொகையில் முறையே 21.95% மற்றும் 18.43% ஆகும்…	…இது, மார்ச் 31, 2026 அன்று முடிவடைந்த நிதியாண்டிற்கான நிறுவனத்தின் சமீபத்திய தணிக்கை செய்யப்பட்ட தனிநிலை மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில், நிறுவனத்தின் மொத்த செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் கையிருப்பு நிதிகளின் மொத்தத் தொகையில் முறையே 23.94% மற்றும் 18.37% ஆகும்…
விளக்க அறிக்கை – புள்ளி 1 (பக்கம் 11)	…மார்ச் 31, 2026 நிலவரப்படி, நிறுவனத்தின் சமீபத்திய தணிக்கை செய்யப்பட்ட தனிநிலை மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில், மொத்த செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் கையிருப்பு நிதிகளின் மொத்தத் தொகையில் முறையே 21.95% மற்றும் 18.43% ஆகும்…	…மார்ச் 31, 2026 நிலவரப்படி, நிறுவனத்தின் சமீபத்திய தணிக்கை செய்யப்பட்ட தனிநிலை மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில், மொத்த செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் கையிருப்பு நிதிகளின் மொத்தத் தொகையில் முறையே 23.94% மற்றும் 18.37% ஆகும்…
விளக்க அறிக்கை – புள்ளி 3 (பக்கம் 12)	மேற்கூறப்பட்ட அதிகபட்சத் தொகையானது, மார்ச் 31, 2026 நிலவரப்படி நிறுவனத்தின் சமீபத்திய தணிக்கை செய்யப்பட்ட தனிநிலை மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளின்படி, முழுமையாகச் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் கையிருப்பு நிதிகளின் மொத்தத் தொகையில் முறையே 21.95% மற்றும் 18.43% ஆகும்…	மேற்கூறப்பட்ட அதிகபட்சத் தொகையானது, மார்ச் 31, 2026 நிலவரப்படி நிறுவனத்தின் சமீபத்திய தணிக்கை செய்யப்பட்ட தனிநிலை மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளின்படி, முழுமையாகச் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் கையிருப்பு நிதிகளின் மொத்தத் தொகையில் முறையே 23.94% மற்றும் 18.37% ஆகும்…

பங்குகளைத் திரும்பப் பெறும் அளவு (Buyback Size), திரும்பப் பெறும் ஒரு பங்கின் விலை (Buyback Price), திரும்பப் பெற முன்மொழியப்பட்டுள்ள பங்குகளின் எண்ணிக்கை அல்லது பங்குகளைத் திரும்பப் பெறுதல் தொடர்பான வேறு எந்த விதிமுறைகளிலும் எவ்வித மாற்றமும் இல்லை.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவுக்கான (Remote E-voting) கால அட்டவணையிலும் எந்த மாற்றமும் இல்லை. அதன்படி, மின்னணு வாக்குப்பதிவு நவம்பர் 04, 2026 அன்று காலை 9:00 மணி (IST) முதல் டிசம்பர் 03, 2026 அன்று மாலை 5:00 மணி (IST) வரை நடைபெறும்.

இந்தத் திருத்த அறிவிப்பு, ஏற்கெனவே அனுப்பப்பட்ட அஞ்சல் வாக்குச் சீட்டு அறிவிப்புடன் இணைத்துப் படிக்கப்பட வேண்டும். மேலும், இது அந்த அறிவிப்பின் ஒருங்கிணைந்த பகுதியாக அமையும். இதற்கான தகவல் நவம்பர் 18, 2026 அன்று பங்குதாரர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

இங்கு திருத்தம் செய்யப்பட்டுள்ள விவரங்களைத் தவிர, அஞ்சல் வாக்குச் சீட்டு அறிவிப்பின் மற்ற அனைத்து உள்ளடக்கங்களும் மாற்றமின்றித் தொடரும்.

மேற்கண்ட அறிவிப்பு, நிறுவனத்தின் இணையதளமான www.alldigitech.com, BSE Limited ("BSE") நிறுவனத்தின் இணையதளத்தின் தொடர்புடைய பிரிவான www.bseindia.com, National Stock Exchange of India Limited ("NSE") நிறுவனத்தின் இணையதளமான www.nseindia.com மற்றும் NSDL இணையதளமான www.evoting.nsdl.com ஆகியவற்றிலும் கிடைக்கப்பெறும்.

மின்னணு வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் அல்லது சிக்கல்கள் இருப்பின், www.evoting.nsdl.com இணையதளத்தில் உள்ள ஏதுடௌனீ பிரிவின் கீழ் கிடைக்கப்பெறும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மற்றும் மின்னணு வாக்குப்பதிவு வழிகாட்டி கையேட்டைப் பார்க்கலாம். அல்லது evoting@nsdl.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.


அல்டிஜி டெக் லிமிடெட்
இமையொப்பம்/-
ஷிவானி சர்மா
கம்பெனி செயலர் மற்றும் இணக்க அதிகாரி
ACS - 39590

தேதி: நவம்பர் 18, 2026
இடம்: சென்னை

நிவா பூபா 'மெரிடியன்' திட்டம்

எல்லைகளற்ற சுகாதார பராம ரிப்பை உயிர்ப்பிக்கும் வகையில் நிவா பூபா 'மெரிடியன்' திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. பூபா குளோபல் நிறுவனத்துடன் இணைந்து அறிமுகப்படுத்தப்பட் டுள்ள இந்த முதன்மையான சர்வதேச மருத்துவ காப்பீட்டு திட்டம், உலகளவில் பயணிக்கும் தனிநபர்கள் மற்றும் குடும்பங் களுக்கு விரிவான உலகளா விய பாதுகாப்பு, முன்னணி மருத்துவ நிபுணர்களுக்கான அணுகல் மற்றும் தனிப்பயனாக் கப்பட்ட கான்சியர்ஜ் தலைமை யிலான சுகாதார சேவைகளை ஒருங்கிணைத்து வழங்குகிறது என்று நிவா பூபா டிஜிட்டல் வணிகப்பிரிவு இயக்குநர் நிமிஷ் அகர்வால், பூபா குளோபல் நிதி இயக்குநர் நிக் பிரவுன் கூறினர்.

ஹேவல்ஸ் இந்தியா சீலிங் பேன்



ஹேவல்ஸ் இந்தியா, புதிய தலைமுறை சீலிங் பேன்களை இன்று அறிமுகப் படுத்தியுள்ளது. இதில் இந்தியா வின் முதல் சூப்பர் ஹைஸ்பீட் பில்டிசி+ பேன், டுயல் கண்ட்ரோல் வசதி கொண்ட சைலண்ட் ஏர் மேக்ஸ் பில்டிசி+ பேன்கள் மற்றும் இந்தியாவின் முதல் ஏஜென்டிக் ஏஐ பேன் ஆகிய மூன்று முக்கிய புதுமைகள் இடம்பெற்றுள்ளன. ஏஜென்டிக் ஏஐ பேன் இயல்பான பேச்சுக்களை புரிந்துகொண்டு பயனர்களின் தேவைக்கேற்ப செயல்படும் திறன் கொண்டது என்று விற்பனை பிரிவின் மூத்த துணைத்தலைவர் குல்பூஷன் பரத்வாஜ் கூறினார்.

SUD Life காப்பீட்டு திட்டம்

ஸ்டார் யூனியன் டாய் – இச்சி லைஃப் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (SUD Life), 'SUD Life YUVA Smart Term' என்ற புதிய தூய கால ஆயுள் காப்பீட்டு திட் டத்தை அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது. குடும்பத்தின ருக்கு எளிமையான நிதி பாது காப்பை வழங்க விரும்பும் தனி நபர்களுக்காக இந்த திட்டம் வடிமைக்கப்பட்டுள்ளது. அவர்க ளின் பொறுப்புகள் அதிகரிக்கும் போது காப்பீட்டு தொகையையும் அதிகரித்துக் கொள்ளும் வசதியையும் இத்திட்டம் வழங் குகிறது. 18 முதல் 65 வயது வரையிலான வாடிக்கையாளர்கள் இந்த காப்பீட்டு திட்டத்தை பெற்றுக் கொள்ளலாம் என்று SUD Life நிர்வாக இயக்குநர் அபய் திவாரி கூறினார்.

தமிழ்நாடு அரசு
வருவாய் கோட்ட ஆட்சியர் அலுவலகம், தென் சென்னை கோட்டம்.
கிண்டி, சென்னை–600032.

அ2/5495/2026 — நாள்: 05.11.2026

பொது ஏல அறிவிப்பு

சென்னை-600032, புதிய எண்:63 ஜி.என். செட்டி சாலை, தி.நகர் , சென்னை-600117 முகவரியில் இயங்கி வரும் ஓசோன் புராஜெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் அதன் வாடிக்கையாளர் திரு.கோ.பாபு பிரசாத் என்பவரிடமிருந்து மேற்படி ஜல்லடியன்பேட்டை இணைப்பு சாலை, ஜல்லடியன்பேட்டை கிராமத்தில் அமைந்துள்ள F1 பிளாக்கில் பிளாட் எண்: F11910-னை உரிய காலத்திற்குள் ஒப்படைக்கத் தவறியதால் தீர்ப்பளிக்கும் அதிகாரி, தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை தீர்ப்பாயம் அவர்களின் E.P No: 01/2024 in R.C.P 75 of 2022 ஆகியவற்றின்படி மேற்படி ஓசோன் புராஜெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்டியிணை Rs. 22,70,979/- (Interest on Rs.17,05,814/- at the rate of 9.50% p.a from the date of respective payment till payment by the respondent and also Litigation expenses of Rs.25,000/-) திருவாளர் திரு.கோ.பாபு பிரசாத் என்பவருக்கு செலுத்த வேண்டும் என உத்தரவிட்டுள்ளார். மேற்படி ஏலத்தில் விற்பனை செய்யபட உள்ள நிலமானது சோழிங்கநல்லூர் வட்டம், ஜல்லடியன்பேட்டை கிராமம், பிளாக் எண்:F1 – F11910 புல எண். 62/2C2 மற்றும் இதர புல எண்களில் அமைந்துள்ளது.

இதன் காரணமாக கீழ்க்கண்ட சொத்துக்களை எதிர்வரும் 09.12.2026 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பொது ஏலத்தில் விற்பனை செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சொத்தின் விவரம் மற்றும் சர்வே எண்.	தளம் மற்றும் குடியிருப்பு விவரம்	குடியிருப்பு எண்	பரப்பு (sq. ft)	பிரிபடாத பரப்பு (ச.அடி)	கட்டிடத்தின் மதிப்பு (ரூ)	பிரிபடாத பரப்பின் மதிப்பு (ரூ.)	சொத்தின் மொத்த மதிப்பு (ரூ.)
S.No.62/C2 and others... Jalldianpet Village	19th floor F1 Block,	Flat No.F11910	668	134	10,46,456/-	2,94,800/-	22,70,979/-

மேற்படி அசையா சொத்துக்களின் மொத்த குறைந்த பட்ச விலை Rs.22,70,979/- (Interest on Rs.17,05,814/- at the rate of 9.50% p.a from the date of respective payment till payment by the respondent and also Litigation expenses of Rs.25,000/-)

மேற்படி சொத்து பொது ஏலம் வாயிலாக கிரையம் பெற பொதுமக்கள் குறைந்த பட்ச விலையினை கருத்தில் கொண்டு மேற்படி சொத்து மொத்தமாக ஏலம் கோர உள்ள தொகையினை குறிப்பிட்டு எழுத்து பூர்வமாக மேற்கண்ட ஏலம் நடைபெறும் நாள் மற்றும் நேரத்தில் வருவாய் கோட்ட ஆட்சியர் அலுவலகம், தென் சென்னை கோட்டம், கிண்டி, சென்னை-600032 எனும் முகவரியில் நடைபெறும் ஏலத்தில் பங்கு பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது. ஏலத்தில் பங்கு பெற விருப்பம் உள்ளவர்கள் மேற்கண்ட சொத்தின் மொத்த மதிப்பில் 15% வைப்பு தொகையாக ஏலம் நடைபெறும் நேரத்திற்கு முன் கேட்பு காசோலையாக ஏலம் நடத்தும் அலுவலரிடம் செலுத்தினால் மட்டுமே ஏலத்தில் பங்கு பெற அனுமதிக்கப்படும். மேற்படி சொத்துக்களை 02.12.2026 மற்றும் 04.12.2026 ஆகிய தேதிகளில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்த பட்ச விலைக்கும் குறைவாக மேற்படி அசையாச் சொத்து விற்பனை செய்யபட மாட்டாது என்பதும் அறிவிக்கப்படுகிறது.

ஏல அலுவலர் /வருவாய் கோட்டாட்சியர்.
தென் சென்னை கோட்டம், கிண்டி, சென்னை-600032.

செ.ம.தொ.இ./970/வரைகலை/2026

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கண்காணிப்புப்பொறியாளர் அலுவலகம், பொபது, மரபு கட்டடங்கள் வட்டம், சென்னை –5.
ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்: 07/ மகவ / 2026–27, நாள்:17.11.2026.
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை – மொத்த வகை/ ஒரு உறை முறை
மறு அழைப்பு

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர், பொபது, மரபு கட்டடங்கள் வட்டம், சேப்பாக்கம், சென்னை –5, அவர்களால் கீழ்காணும் பணிகளுக்கு பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து மின்னணு ஒப்பந்தபுள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

வ. எண்	பணியின் பெயர்	பணியின் தோராய மதிப்பு (வரிகள் உட்பட)	முன்வைப்பு தொகை மற்றும் பணிகள் முடிக்க வேண்டிய காலம்	தகுதி பெற்ற பதிவு செய்த ஒப்பந்தகாரர்கள்	முன்வைப்பு தொகை வரவு வைத்து கட்டவேண்டிய அலுவலர்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	இராணிப்பேட்டை மாவட்டத்தில் தேசிங்கு ராஜா ராணி நினைவுச்சின்னத்திற்கு (இரண்டாம் கட்ட பணிகள்) தேசிங்கு ராஜா மற்றும் ராணி சிலை வழங்குதல்.	ரூ. 95.42 இலட்சம்	ரூ. 95,000/– 3 மாதங்கள்	வகுப்பு–IV மற்றும் அதற்கு மேல் (திருத்திய பணவரம்பின் படி)	முன்வைப்பு தொகை மின்னணு பணப்பரிமாற்ற முறையில் இணைய தளத்தில் செய்திடல் வேண்டும்
2.	திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியில் உள்ள எஸ்.வி. நகரம் ஜாகிர் அரண்மனை ராணி மஹாலுக்கு (பாரம்பரிய கட்டிடம்) உள் மற்றும் வெளிப்புற மின்சாரம் வழங்குதல்–.	ரூ. 77.55 இலட்சம்	ரூ. 77,000/– 2 மாதங்கள்	வகுப்பு–IV மற்றும் அதற்கு மேல் (திருத்திய பணவரம்பின் படி) (மின் பதிவு)	

1 ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பதிவிறக்கம் செய்வதற்கான தொடக்க நாள் மற்றும் நேரம் : 19.11.2026 மாலை 06.00 மணி முதல்
2 ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணைய வழியில் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம். : 04.12.2026 பிற்பகல் 03.00 மணி வரை
3 ஒப்பந்தப்புள்ளிகள் இணையத்தில் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம். : 04.12.2026 பிற்பகல் 03.30 மணி அளவில்
4 ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் http://tntenders.gov.in என்ற இணைய தளத்தில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் இணைய தளம் வாயிலாகவே ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.
5 முன்வைப்பு தொகை இல்லாமல் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் உடனடியாக நிராகரிக்கப்படும்.
6 கூடுதல் தகவல்களுக்கு http://tntenders.gov.in என்ற இணைய தளத்தினை பார்வையிடவும்.

கண்காணிப்புப்பொறியாளர், பொபது,
மரபு கட்டடங்கள் வட்டம், சென்னை –5.

செ.ம.தொ.இ/3633/ஒப்பந்தப்புள்ளி/2026

தமிழ் நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டடம் (க & ப) வட்டம் தஞ்சாவூர்.

இனவிலை முறை
மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்:19/க.பொ/க (க & ப) வட்டம், தஞ்சாவூர் /2026-2027/ நாள்.17.11.2026

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டடம் (க & ப) வட்டம், தஞ்சாவூர்-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 1 பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. புதுக்கோட்டை மாவட்டத்தில் 1 பணிக்கு ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள்: **19.11.2026 முதல் 26.11.2026 காலை 11.00 மணி வரை.**
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம்: **26.11.2026 காலை 11.00 மணி வரை.**
4. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: **27.11.2026 காலை 11.00 மணி முதல்.**

கண்காணிப்புப் பொறியாளர் பொபது.,
கட்டட (க & ப) வட்டம் தஞ்சாவூர்.

செ.ம.தொ.இ./3622/ஒப்பந்தப்புள்ளி/2026

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டடம் (க & ப) வட்டம் தஞ்சாவூர்.

இனவிலை முறை
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் :20/க.பொ/க (க & ப) வட்டம்.
தஞ்சாவூர் /2026-2027/ நாள். 17.11.2026
முன்தகுதி விண்ணப்பம் மற்றும் விரிவான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு. (இரு உறை முறை)

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டடம் (க&ப) வட்டம், தஞ்சாவூர்-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து ஒரு பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. கடலூர் மாவட்டத்தில் ஒரு பணிக்கான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https:/tnenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் 23.11.2026 முதல் 07.12.2026 காலை 11.00 மணி வரை.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் 07.12..2026 காலை 11.00 மணி வரை.
4. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 08.12.2026 காலை 11.00 மணி முதல்

கண்காணிப்புப் பொறியாளர் பொது.,
கட்டட (க & ப) வட்டம் தஞ்சாவூர்

செ.ம.தொ.இ/3640/ஒப்பந்தப்புள்ளி/2026

தமிழ் நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், ஈரோடு

(மொத்த தொகை – இனவிலை முறை)
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். NIT: 09 / 2026 – 27 / கட்டட (க & ப) வட்டம் / ஈரோடு / நாள். 16.11.2026

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

தமிழக ஆளுநருக்காகவும் அல்லது சார்பாகவும் தமிழ்நாடு அரசின் மின்னணு கொள்முதல் வலைதளம் மூலமாக கண்காணிப்புப்பொறியாளர், பொபது., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், ஈரோடு, அவர்களால் தமிழ்நாடு அரசின் அரசாணை நிலை எண் 37 பொ.ப.(ஜி2) துறை 17.06.2022ன் படி பொதுப்பணித்துறையில் வகுப்பு IV மற்றும் அதற்கு மேல் வகுப்பில் பதிந்துள்ள ஒப்பந்ததாரர்கள் (அல்லது) அரசாணை நிலை எண் 40 பொ.ப.(ஜி2) துறை 16.10.2026ன் படி பொதுப்பணித்துறையில் வகுப்பு III மற்றும் அதற்கு மேல் வகுப்பில் பதிந்துள்ள ஒப்பந்ததாரர்கள் (திருத்திய வகுப்பு) ஒப்பந்ததாரர் பதிவு நடப்பில் உள்ளவர்கள் **"ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் உள்ள அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் காசநோய் (TB) வார்டு கட்டிடம் கட்டும் பணி"** - க்கு இனவிலை முறை மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் 08.12.2026 பிற்பகல் 3.00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. பதிவேற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 08.12.2026 பிற்பகல் 3.30 மணி அளவில் திறக்கப்படும்.

இதர அனைத்து விபரங்கள் https://tnenders.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாற்றங்கள் இருப்பின் மேற்கண்ட இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கண்காணிப்புப்பொறியாளர், பொது.,
கட்டட (க&ப) வட்டம், ஈரோடு – 11

செ.ம.தொ.இ./3623/ஒப்பந்தப்புள்ளி/2026